1981 மார்ச் 2]

கலெக்டர் உத்தரவு போட்டும் வேண்டுமென்றே சிலர் செய்த அக்கிரமம் காரணமாக அந்த நிலம் கொடுக்கப்படவில்லை. அங்கே அவர்கள் பயிர் செய்திருந்ததையும் காலி செய்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? மீண்டும் கலெக்டர் உத்தரவுப்படி அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஏற்கெனவே திரு. ராஜமாணிக்கம் அவர்கள் கேட்டபோது அது மீண்டும் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அதே பதிலைத்தான் இப்போதும் சொல்ல விரும்புகிறேன்.

ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குப் பயிற்சி.

*வினா எண் 325 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. க. ரங்கசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் தற்பொழுது பணியாற்றிவரும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : ஆம் தொடக்கப்பள்ளிகளில் பணி புரியும் இளநிலை (Higher Grade) ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் தகுதியும் சம்பளமும் பெற வாய்ப்பளிக்கும் வகையில் அஞ்சல் வழி மற்றும் நேர்முக பயிற்சிமூலம் கல்வி அளிக்க மாநில கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (Scert) ஒரு தனிப்பிரிவு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 1980, செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்ட இந்த அஞ்சல் வழிக்கல்விக்கான பாடத்தொகுப்புகள் கல்வி வல்லுநர் குழுவால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. 1980, செப்டம்பர் முதல் பிப்ரவரி 1981 வரை நடக்கும் பயிற்சி வகுப்பில் 2500 இளநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். அடுத்து 1981–82-ல் ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையும், அக்டோபர் முதல் பிப்ரவரி வரையிலும் இரண்டு பயிற்சிகள் 5000 இளநிலை ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும். ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் உள்ள இளநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை விகிதத்திற்கேற்ப இளநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெற சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, ஹையர் கிரேடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்தவர்களே பலர் இன்று அந்தத் துறையிலே வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் வேலையில் இருப்பவர்ளுக்கு மறுபயிற்சி கொடுப்பதற்காக முயற்சி செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு ஆங்காங்கே காலியுள்ள இடங்களில் வேலை அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்டவர்கள் அனேகமாக இருக்க மாட்டார்கள் என்பதால்தான் இந்தத் திட்டமே செயல்படுத்தப்படுகின்றது. அப்படி யாரேனும் இருந்தால் அவர்கள் தனிப்பட்ட முறையிலே கோரிக்கை வைப்பார்களேயானால் அது கவனிக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, தற்போது ஊராட்சி பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஹையர் கிரேடு ஆசிரியர்கள் டி.டி.சி. ட்ரெயினிங் கோர்ஸ் முடிக்காத காரணத்தால் அவர்களுக்கு இன்கிரிமெண்ட் வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாரதிதாசன் பிறந்த நாள் விழா.

*வினா எண் 326—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டுதோறும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் பாரதிதாசன் பரம்பரையைச் சேர்ந்த கவிஞர் ஒருவருக்குப் பத்தாயிரம் ரூபாய் பணமும் விருதும் வழங்கப்பட்டு வந்தது, இவ்வாண்டு நிறுத்தப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) 1980 ஆம் ஆண்டு பாரதிதாசன் பிறந்தநாள் விழா நடைபெற இருந்த சமயம் இம்மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கலைக்கப்பட்டதால் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் போது விழா மட்டும் நடத்தப்பட்டது. ஆனால் விருது ஏதும் வழங்கப்படவில்லை. எனவே பாவேந்தர் பாரதிதாசன் விருது 1980-ல் எவருக்கும் வழங்கப்பெறவில்லை.

சட்டமன்றப் பேரவை தமிழ்நாடு வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS